# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு

## 2013/2014 (மார்ச் - ஏப்ரல் - 2019)

## EDS - 4113 கல்வி ஆய்வு முறைகள் (Research Methods in Education)

நேரம் 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

---

## பகுதி – I

1) அ) பிரயோக ஆய்வுகள் (**Applied Research**) கல்வித்துறையில் தற்காலத்தில் நிலவுகின்ற அடிப்படைத் தத்துவங்களை புதிய நிபந்தனையின் கீழ் பரிசோதித்து முடிவுகளை எடுத்துக் கூறுகின்றன. இதன் அடிப்படையில் பிரயோக ஆய்வின் முக்கிய அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

ஆ) புதிய துறையொன்றைக் கண்டுபிடித்து புதிய தத்துவங்களைக் (**New theories**) கட்டியெழுப்பி புதிய விடயங்களை உலகிற்கு எடுத்துக் கூறும் ஆய்வு பற்றிய உமது கருத்துக்களை வியாக்கியானம் செய்க. (05 புள்ளிகள்)

இ) ஒரு ஆய்வில் அடிப்படையாகவுள்ள நான்கு (04) செயற்பாடுகளைப் பற்றி அவற்றை ஒப்பீட்டு ரீதியில் மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

2) அ) ஆய்வு பிரச்சினையொன்றை (**Research problems**) இனம்காணும் முறையை விளக்கி, ஆய்வுப் பிரச்சினைனைத் தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு (4) காரணிகளை முன்வைக்குக? (04 புள்ளிகள்)

ஆ) ஆய்வுச் செய்முறையொன்றில் இலக்கிய மீளாய்வானது (**Review of Literature**) முக்கியமாக பல அடிப்படை நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான 05 நோக்கங்களைப் பற்றிய உமது கருத்துக்களை எடுத்துரைக்குக. (05 புள்ளிகள்)

இ) "இலக்கிய மீளாய்வு திருப்திகரமாக செய்யப்படாதவிடத்து ஆய்வாளர் ஆய்வுப்பிரச்சினை (**research problems**), பொதுநோக்கம் (**general objective**), சிறப்பு நோக்கம் (**specific objectives**), ஆய்வுக்கருவி (**research instruments**) ஆகியன பற்றிய திருப்தியான அறிவினைப் பெறமுடியாது" இது பற்றிய உமது கருத்துக்களை தொகுத்து ஆராய்க.

(05 புள்ளிகள்)

3) அ) **ஆய்வின் கருதுகோள் (Research hypothesis)** என்பதை வரைவிலக்கணப்ப(6)
அதிலுள்ள சாரும் **(Dependent Variable)**, சாரா **( Independent Variable)** மாறிகபிெ
செயற்பாட்டை ஒரு கருதுகோளை உதாரணமாகக்கொண்டு விளக்குக. (04 புள்ளிபற்

ஆ) **"ஆய்வுக்கருவிகள் (research instruments)** குறிப்பாக **ஆய்வு வினாக்களின் (Rese**
**Question)** பெறுமதியை ஈடுசெய்யாவிடின் ஆய்வின் சிறப்பு நோக்கத்தை அடையமுடியா
இக்கூற்றின் கருத்தினை எவ்வாறு ஆய்வில் பிரயோகிப்பீர்? , (05 புள்ளி

இ) நேர்முகம் (interview), காணலில் இடம்பெறும் வினாக்களின் பண்புகள் எட்டினை ஆ
இனை சுருக்கமாக விளக்குக? (05 புள்ளி

## பகுதி II

4) அ) ஆய்வின்போது ஏகவினக் குடித்தொகை, பல்லினக் குடித்தொகை பற்றிய ஆ
மாதிரியெடுத்தல் நுட்பத்தில் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றதென்பதை விளக்கி, மாதிரி
தெரிவு செய்யும்போது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய 5 விடயங்களை குறிப்பிடுக?

(10 புள்ளிகள்

ஆ) படிமுறை எழுமாற்று மாதிரி **(systematic random sampling)**, படையாக்கப்ப
எழுமாற்று மாதிரி **(stratified random sampling)** ஆகிய மாதிரியெடுப்புகளை சுருக்கம
விளக்குக? (08 புள்ளிகள்

இ) மாதிரியொன்றைத் தெரிவு செய்யும்போது (selection of sample) கவனத்தில் கொள்
வேண்டிய முக்கியமான 05 விடயங்கள் உமது ஆய்வில் எவ்வாறு வழிநடத்தப்படுகின்றன?

(06 புள்ளிகள்)

5) அ) பரிசோதனை முறை ஆய்வில் பரிசோதனைக்குழு, கட்டுப்பாட்டுக்குழு ஆகியவற்றி
செயற்பாடுகளை விளக்குக? (08 புள்ளிகள்)

ஆ) விஞ்ஞானமுறை ஆய்வில் உய்த்தறிமுறை (Deductive method), தொகுத்தறி மு
(Inductive method) ஆகிய அறிவுத்தொகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இத
செயற்பாடுகள் பற்றிய விளக்கத்தை முன்வைக்குக? (09 புள்ளிகள்

இ) ஆய்வொன்றில் நம்பகம் (Reliability), தகுதி (Validity) ஆகிய அம்சங்கள் ஏ
முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை விளக்குக? (07 புள்ளிகள்

6) அ) கல்வித்துறையில் பயன்படுத்தப்படும் அளவைநிலை ஆய்வுகள்(survey research) பின்வரும் மூன்று வகைகளாக மேற்கொள்ளப்படுகின்றன. கல்வி ஆய்வில் இதன் பிரயோகம் பற்றி உமது கருத்துக்களை விளக்குக.

I. நெட்டாங்கு ஆய்வு (cohort studies)

II. குறுக்குவெட்டு ஆய்வு (cross sectional studies)

III. செல்நெறி ஆய்வு (trend or prediction studies) (08 புள்ளிகள்)

ஆ) செயல்நிலை ஆய்வினை(Action Research) சிறந்த முறையில் வழிநடத்திச் செல்லக்கூடிய சுழற்சிப்படைகளை விளக்குக?

(08 புள்ளிகள்)

இ) செயல்நிலை ஆய்வானது முறைசார்ந்த ஆய்விலிருந்து பல்வேறு அம்சங்களில் வேறுபடுகின்றது. இவ்வகையான வேறுபாடுகளை

i) நோக்கம் (Objective)

ii) ஆய்வுப்பிரச்சினை (Research problems)

iii) மாதிரித்தெரிவு (Selection of sample)

iv) தரவுகளின் பகுப்பாய்வு (Data Analysis) ஆகிய தலைப்புகளின் கீழ் விளக்குக?

(08புள்ளிகள்)

07) ஆ) **'இன்றைய இரண்டாம்தரப் பாடசாலைகளில் வினைத்திறன்மிக்க செயல்நிலை ஆய்வின் (Action Research) மூலம் பாடஅடைவினை பல்வேறு நியமங்களில் மேம்படையச் செய்யலாம்'** இக்கூற்றின் அடிப்படையில் உமது கருத்துக்களை முன்வைத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ) **"கல்வி முகாமைத்துவத்தில் வினைத்திறன் மற்றும் பயனுறுதி வாய்ந்த பெறுமானத்தைப் பெற்றுக்கொள்வதற்குப்** பாடசாலை **முகாமைத்துவமானது பல்வேறு வழிமுறைகளில் அளவைநிலை ஆய்வினை (Survey research) நடைமுறைப்படுத்த வேண்டியது முக்கியமானது."** பாடசாலைகளில் இது எவ்வளவு தூரம் சாத்தியமாகின்றதென்பதை பகுத்தாராய்க. (12 புள்ளிகள்)

**மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 28 , பகுதி II – 72)**